பக்கங்கள் 6 விலை சதம் 40 ★

# ஈழநாடு
The EELA NADU

மலர் 19 மார்கழி 9 முஹறம் 12 இதழ் 314
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 24-12-77

## தெரிவுக் கமிட்டி ஜனவரி 7ல் கூடுகிறது

[கொழும்பு]
அரசியல் அமைப்புத் (திருத்தம் சம்பந்தமான) தெரிவுக் கமிட்டி ஜனவரி மாதம் 7-ந் திகதி முதற் தடவையாகக் கூடும்.

இதனைத் தொடர்ந்து கமிட்டியின் கூட்டம்தொடர்ச்சியாக நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அரசியல் அமைப்புத் திருத்தம் சம்பந்தமாக பொதுமக்களிடமிருந்து கணிசமான அளவு ஆலோசனைகள் தெரிவுக் கமிட்டிக்கு வந்திருக்கின்றன என்றும் இவை கவனமாகப் பரிசீலனை செய்யப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ம)

## ஜி. சி. ஈ. விடைத்தாள்கள் திடீர் மறைவு

[திருகோணமலை]
ஜி. சி. ஈ. பரீட்சையின் தமிழ், சிங்கள விடைத் தாள்கள் பஸ்ஸில் பாதுகாப்புடன் கொண்டு செல்லப்படும்போது திடீரென மறைந்துவிட்டன.

திருகோணமலைத் தபாற்கந்தோரிலிருந்து புகையிரதநிலையத்திற்கு பஸ்ஸில் பதிவுசெய்யப்பட்ட 14 தபாற் பைகள் அனுப்பப்பட்டன.

அவற்றுள் ஜி சி ஈ பரீட்சை விடைத் தாள்கள் அடங்கிய பை காணமற்போய்விட்டது. இப்பைகளுக்கு 3 தபால் ஊழியர்கள் பொறுப்பாக இருந்தார்கள்.

பொலிஸார் இது பற்றி விசாரணை செய்துவருகின்றனர். [க-அ]

# வாக்கெடுப்பு இல்லாமல் பட்ஜட் நிறைவேறியது!

## "மகிழ்ச்சியான ஆண்டாக 1978 மலரட்டும்" -ரூனி

(கொழும்பு)

ஐக்கியதேசியக் கட்சி அரசாங்கத்தின் முதலாவது வரவு-செலவுத் திட்டத்தின் மீதான மூன்றுவது—இறுதி வாசிப்பு, நேற்றிரவு வாக்கெடுப்பின்றி நிறைவேறியது.

கடந்த 28 தினங்களாக காலை பத்து மணிமுதல் இரவு எட்டுமணி வரை தொடர்ச்சியாக நடைபெற்றுவந்த பட்ஜட் விவாதம், நேற்றிரவு இறுதி வடிவத்தைப் பெற்று வாக்கெடுப்பு நடாத்தப்படாமலேயே சிறப்பான முறையில் நிறைவேறியது. உணவு, கூட்டுறவுத் துறை அமைச்சுமீதான மான்யம் சம்பந்தமான குழுநிலை விவாதமே நேற்றிரவு கடைசியாகப் பரிசிலனைக்கு எடுக்கப்பட்டிருந்தது.

### ரூனி கோரிக்கை

பட்ஜட் குழுநிலை விவாதத்தை முடித்துவைத்து நிதி, திட்டமிடல் அமைச்சர் திரு. ரூனிடி மெல் பேசுகையில்; 1978-ம் ஆண்டை ஒரு மும்முனைத் திட்ட ஆண்டாகப் பிரகடனப்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

''உற்பத்தி ஆண்டாகவும், இளைஞர்களுக்கு— யுவதிகளுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் ஆண்டாகவும், அபிவிருத்தி ஆண்டாகவும் அடுத்த ஆண்டு பிரகடனப்படுத்தப் படவேண்டும்'' என்று நிதி, திட்டமிடல் அமைச்சர் கோரிக்கை விடுத்தார்.

''நான் பதினொரு விவாதங்களில் கலந்துகொண்டுள்ளேன். விவாதகாலத்தில் அங்கத்தவர்கள்அளித்த ஆதரவும் ஒத்துழைப்பும் வழங்கிய ஆலோசனைகளும் எனக்கு உற்சாகத்தை ஏற்படுத்தின முன்னர் ஒருபோதும் எந்த பட்ஜட்டுக்கும் இப்படியான ஒரு வரவேற்பு கிடைத்ததில்லை என்று கூறிய அமைச்சர்;

''எதிர்வரும் 1978ம் ஆண்டு நாட்டுமக்கள் அனைவருக்கும் ஒரு மகிழ்ச்சியான ஆண்டாக மலரட்டும்''என்று நம்பிக்கையூட்டினர்.

சபாநாயகரும், நத்தார் புதுவருட வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொண்டார். (ம)

## டிக்கட் பரிசோதகர்களிடம் அடையாளம் கேட்ட பிரயாணி நீதிபதி முன்னிலையில் ஆஜர்

(யாழ்ப்பாணம்)
பஸ் பிரயாணி ஒருவரிடம் பஸ்ஸில் ஏறிய மூவர் டிக்கட்டைக் காட்டுமாறு கேட்டபோது அப்பிரயாணி அவர்களிடம் அடையாளம் காட்டி திருப்பிக்குமாறு கோரியதைத் தொடர்ந்து அப்பிரயாணி ஆனைக்கோட்டைப் பொலிஸில் ஒப்படைக்கப்பட்டார்.

யாழ்ப்பாணத்திலிருந்து மாதகல் சென்றுகொண்டிருந்த சந்தேகநபரான சவரிமுத்து

(6-ம் பக்கம் பார்க்க)

## பரீட்சை நிலையத்தில் 'மோசடி செய்த இளைஞன் கைது!

[யாழ்ப்பாணம்]
பரீட்சை மண்டபம் ஒன்றில் மோசடி செய்தார் என்ற சந்தேகத்தின்மீது இளைஞர் ஒருவர் பொலிஸ் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளார்.

நேற்று முன் தினம் புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரிப் பரீட்சை மண்டபத்திலேயே இம்மோசடி இடம்பெற்றதாகத் தெரியவந்துள்ளது.

மேற்படிகல்லூரியில் கடமையிலீடுபட்டிருந்த பொலிசார் அங்கு சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடிய ஒரு இளைஞரை மடக்கிப்பிடித்த போது அவர் பரீட்சார்த்தி ஒருவருக்கு விடைத்தாள்களை கொடுத்த விஷயம் தெரியவந்தது.

பொலிசாரால் கைது செய்யப்பட்ட இந்த இளைஞர்

]6ம் பக்கம் பார்க்க]

## இக்பால் நூற்றாண்டுவிழாவில் 'அமிர்' கலந்துகொள்வார்

[கொழும்பு]
இலங்கையிலுள்ள அரசியல் நிலைமைபற்றி தம்மைச் சந்தித்த பாகிஸ்தான் தூதுவரிடம் எதிர்க்கட்சித் தலைவர் திரு. ஏ. அமிர்தலிங்கம் விளக்கிக்கூறினர்.

பாகிஸ்தானில் தேர்தல் பின் போடப்பட்டதற்கான காரணங்கள் பற்றியும், இச்சந்திப்பின்போது பிரஸ்தாபிக்கப்பட்டது.

கவிஞர் இக்பாலின் நூற்றாண்டு விழாவில் கலந்துகொள்ளுமாறு பாகிஸ்தான் தூதுவர் விடுத்த அழைப்பை எதிர்க்கட்சித் தலைவர் திரு. ஏ. அமிர்தலிங்கம் ஏற்றுக்கொண்டார்.

எதிர்க்கட்சித் தலைவர் திரு. ஏ. அமிர்தலிங்கம், ஜப்பான் தூதுவரையும் சந்தித்து இங்குள்ள அரசியல் நிலைமைபற்றி பேசினர். (ம)

## போலித் துப்பாக்கியுடன் இளைஞன் கைது!

[யாழ்ப்பாணம்]
வீதியில் வந்துகொண்டிருந்த இளைஞர் ஒருவரைச் சந்தேகத்தின்மீது பொலிசார் விசாரணைக்குட்படுத்தியபோது. அவரிடம் ஒரு போலி கைத்துப்பாக்கி இருந்ததுடன் கொள்ளை முயற்சி ஒன்றில் அவர் ஈடுபட்டிருந்ததும் தெரியவந்துள்ளது.

நேற்று முன்தினம் மாலை கோப்பாய் பொலிஸ் கான்ஸ்டபிளான புதேயு தேநீர் அருந்திவிட்டு வெளியே வந்த போது, வீதியால் வந்த ஒரு இளைஞரின் மீது சந்தேகங்கொண்டு அவரை பொலிஸ் நிலையம் அழைத்துச் சென்று விசாரணைக்குட்படுத்தியபோது அவரிடம்ஒரு போலி கைத்துப்பாக்கி இருப்பது கண்டுபிடிக்கப்பட்டதுடன் கல்வியங்காட்டில் நடைபெற்ற கொள்ளை முயற்சியில் தப்பியோடியவர் இவர் என்பதும் தெரியவந்ததாம்.

செல்வராஜா செல்வக்குமார் என்ற இந்த இளைஞரை கல்வியங்காட்டிற்கு அழைத்து வந்த கான்ஸ்டபிள் அங்குள்ள 'பார்' ஒன்றில் இருந்து களவாடப்பட்ட ஒரு சைக்கிளையும் சாராயத்போத்தலையும் மீட்டார்.

இவரும் மற்றுமொரு நண்பனும் 18-ந் திகதி படம் பார்த்துவிட்டு வந்த ஒருவரிடம் கைக்கடிகாரம் ஒன்றைக் கொள்ளையடித்த குற்றத்திற்காக தேடப்பட்டு வந்தவர்கள் என்பதும் பொலிசாரின் விசாரணையிலிருந்து தெரியவந்துள்ளது. (கா)

## மரத்திலிருந்து விழுந்தவரை......

[யாழ்ப்பாணம்]
மரத்திலிருந்து தவறி விழுந்தவர், அவர் வைத்திருந்த கத்திக்கே பலியான பரிதாப சம்பவம் நல்லூர் அரசடி வீதியில் நிகழ்ந்துள்ளது

சிதம்பரம் ஐயாக்கண்டு என்ற (80 வயது) தொழிலாளியே இவ்விதமாக மரணமானவராகும்.

யாழ்ப்பாணம் திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. எஸ்.

(6- பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாணத்துக்கும் புதிய பஸ்கள் வரும்
### போக்குவரத்து அமைச்சர் தகவல்

[கொழும்பு]
''யாழ்ப்பாணத்தில் பஸ் சேவைபற்றி நான் அறிந்திருக்கிறேன். விரைவில் அங்கு பஸ்களை அனுப்ப ஏற்பாடு செய்வேன்''

தேசிய அரசுப் பேரவையில் பேசிய போக்குவரத்து அமைச்சர் ஜனுப் எம், எச். முகம்மது மேற்கண்டவாறு கூறினர்.

போக்குவரத்து அமைச்சர் மேலும் கூறியதாவது:

''திருகோணமலைக்கும் மட்டக்களப்பிற்கும் தனியான ரயில்சேவை ஆரம்பிக்கப்படும மின்சார ரயில்சேவை ஆரம்பிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

''1978ம் ஆண்டு மே மாதம் 840 பஸ்கள் இறக்குசெய்யப்படவிருக்கிறது. இம்மாதம் 28ம் திகதி 200 பஸ்கள் வரவிருக்கிறது இவற்றில் ஒரு பதி யாழ்ப்பாணத்திற்கு அனுப்பிவைக்கப்படும்.''

கிளிநொச்சி எம். பி. திரு. வி. ஆனந்தசங்கரி பேசுகையில் கூறியதாவது.''கூட்டுறவு இயக்கம ஒரு புனிதமான இயக்கம்கும். படித்தபல பெரியோர்களால் இந்த இயக்கம் கட்டி எழுப்பப்பட்டு வந்தது 70-ம் ஆண்டுக்குப் பின்னர் இந்த இயக்கம் சீரழியத் தொடங்கியது.'' [ம]

## வரிவிளம்பரம்

### தேவை

யாழ்ப்பாணத்திலுள்ள சினிமா தியேட்டருக்கு அனுபவமுள்ள காசியர் தேவை. பிணைப்பணம் கட்டக்கூடியவர்கள் நற்சாட்சிப் பத்திரங்களுடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 8002 C/o ஈழநாடு லிமிட், யாழ்ப்பாணம். 8002

### விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள இரண்டு சக்கர 'ஜன்மார்' டீசல் உழவு இயந்திரம் விற்பனைக்குண்டு தொடர்புகொள்ளவும். மரிய நாயகம் போல், 95, வட்டக்கச்சி, கிளிநொச்சி. 7933

### மானிப்பாய் பரிஷ் ப. நோ. கூ. சங்கம்
### வெற்றுச்சாக்கு விற்பனை

மானிப்பாய் பரிஷ் ப. நோ. கூ. சங்கத்தில் 3000 வெற்றுச் சாக்குகள் விற்பனைக்குண்டு. சங்கத்தால் விநியோகிக்கப்படும் கேள்விப்பத்திரத்தை ரூபா 200/- முற்பணம் செலுத்தி வாங்கிப் பூரணப்படுத்தி, பொதுமுகாமையாளர், மானிப்பாய் பரிஷ் ப. நோ. கூ. சங்கம், மானிப்பாய் என்ற முகவரிக்கு 28-12-77ம் திகதிக்கு முன்னதாகக் கிடைக்கக் கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்பிவைக்கவும். கேள்விகளை நிராகரிக்கும் உரிமை இயக்குனர் சபைக்கு உண்டு.

பொதுமுகாமையாளர்
22-12-77 8001


# 'அரசிகள் அழுவதில்லை' அறிமுகவிழா

[யாழ்ப்பாணம்]

முல்லைமணியின் 'அரசிகள் அழுவதில்லை' என்ற சிறுகதைத் தொகுதியின் அறிமுக விழா கோப்பாய் அரசினர் மகளிர் ஆசிரியர் கலாசாலை முத்தமிழ் மன்றத்தின் ஆதரவில் பிரபல எழுத்தாளர் 'சொக்கன்' தலைமையில் நடைபெற்றது. அவர் தமது தலைமையுரையில் சிறுகதையின் பொதுப் பண்புகள் பற்றி எடுத்துக்கூறி, ஏனைய கலைத்துறையைச் சேர்ந்தோருக்குச் சமூகத்தில் இருக்கும் கணிப்பு, எழுத்தாளனுக்கு இல்லை. வாசகர் தரும் ஊக்கத்தாலேயே சிறந்த இலக்கியங்களை எழுத்தாளர் படைக்க முடியுமென்று கூறினர்.

இலங்கைப் பல்கலைக்கழக யாழ் வளாகத் தமிழ்த்துறை விரிவுரையாளர் கலாநிதி அ. சண்முகதாஸ் ஆய்வுரை நிகழ்த்தும்போது "இத்தொகுதியிலுள்ள பன்னிரண்டு சிறுகதைகளதும் களங்கள் வெவ்வேறாக இருந்தபோதும் பெரும்பாலும் எல்லாக் கதைகளிலுமே கிராமிய மணத்தைக் காணக்கூடியதாக இருக்கிறது. சமுதாயத்திலே குறைபாடுகள் சிலவற்றைச் சட்டங்களால் நிவர்த்திசெய்ய முடிவதில்லை என்ற சிறந்த கருத்தை 'நூலேணிகள்' என்ற கதை வலியுறுத்துகிறது. 'அமர காவியம்' என்னும் சிறுகதை, ஓர் எழுத்தாளனின் நூல் வெளியீட்டு முயற்சிக்கு உதவ ஆரம்பத்தில் தயங்கும் அவன் மனைவி, இறுதியில் அவன் மானத்தைக் காப்பாற்றத் தாலிக்கொடி உட்படத் தன் நகை முழுவதையுமே அர்ப்பணிக்கின்ற நிலையைச் சித்தரிக்கின்றது. பழைய நாட்டார் பாடல் ஒன்றுக்குச் சிறுகதை வடிவம் கொடுப்பதன் மூலம் ஏனைய எழுத்தாளர்களுக்கு ஒரு முன்மாதிரியைக் காட்டுகிறார் முல்லைமணி சில கதைகளில் செயற்கைத் தன்மைகள் காணப்படினும் பெரும்பாலான கதைகள் இலக்கியத்தரம் வாய்ந்தவை" எனக் குறிப்பிட்டார்.

"முல்லைமணியின் சமூகப் பார்வையை 'அரசிகள் அழுவதில்லை' 'கிராமங்கள் கற்பழிக்கப்படுகின்றன' என்னும் கதைகள் ஆணித்தரமாகக் காட்டுகின்றன. முல்லைமணி தான் பிறந்து வாழ்ந்த மண்ணின் பிரச்னைகளையும் ஈழத்துக்கே பொதுவான பிரச்சினைகளையும் தமது கதைகளில் கையாண்டுள்ளார். 'அவளும் தோற்றுவிட்டாள்' என்ற கதையில் கதை கூறும் உத்தி பொருத்தமாக அமையாததால் கதை சிறப்படையவில்லை. மண்வாசனை', 'நகைச்சுவை' சமூகத்தில் நிலவும் முரண்பாடுகளைச் சித்தரிக்கும் தன்மை என்பவைகளால் இவரின் கதைகள் சிறப்படைகின்றன" என யாழ் வளாகத் துணை நூலகர் நா. சுப்பிரமணியம் குறிப்பிட்டார்.

செல்வி வசுமதி சின்னத்துரை, திருமதி ம. திருச்சிற்றம்பலம், திருவாளர்கள் இ. துரைராசா, வி. சுந்தரலிங்கம், பொன். சுந்தரலிங்கம், திருமதி ம. ஆழ்வாப்பிள்ளை, செல்வி பவானி ஆகியோரும் தம் கருத்துக்களைத் தெரிவித்தனர். முத்தமிழ் மன்றத் தலைவர் பரமலிங்கம் நன்றியுரை கூறினர். நூலாசிரியர் முல்லைமணி பதிலுரை வழங்கினர்.

# போக்குவரத்து அமைச்சருக்குப் புகார்

(வேலணை)

தீவுப்பகுதிக்கு யாழ்ப்பாணத்திலிருந்து நடாத்தப்பட்டு வரும் பஸ் சேவைகளின் சீர்கேடுகள்பற்றி பிரயாணிகள் போக்குவரத்து அமைச்சருக்குப் புகார் செய்துள்ளனர்.

அப்புகார்களில் பஸ் சேவைகளை ஒழுங்கற்ற முறைகளில் நடத்தப்படுவதும் கடல்கடந்து செல்லவேண்டிய இடமான இப்பாதையில் வெளிச்சம் குறைந்த பஸ்களையும் இயங்க முடியாத பஸ்களையும் இப்பாதை வழியாக அனுப்பி பிரயாணிகளை ஏங்கவைக்கின்ற விதங்களில் பஸ் சேவைகளை நடாத்திவருவதுபற்றிய பல புகார்களைத் தெரிவித்துள்ளனர்.

# 1000 பஸ்கள் இறக்குமதியாகும்

[கொழும்பு]

பிரயாணிகளின் வசதியை முன்னிட்டு 1200 பஸ்களை இறக்குமதிசெய்யப் போக்குவரத்து அமைச்சர் ஜனாப் எம். எச். முகமத் தீர்மானித்துள்ளார்.

இவற்றுள் ஜனவரி மாத இறுதியில் முதற் பகுதியாக 200 பஸ்கள் இறக்குமதிசெய்யப்படுமெனத் தெரியவருகின்றது.

மற்றும் 1000 பஸ்களும் அடுத்த வருட முடிவுக்குள் இறக்குமதி செய்யப்படும்.

பஸ் சேவை அபிவிருத்தியில் கிராமப் பகுதிகளுக்கு முக்கிய இடம் அளிக்கப்படவிருக்கிறது. [க-அ]

# நாளை மட்டுவில் அம்மன் தேர்

(யாழ்ப்பாணம்)

மட்டுவில் பண்டித்தலைச்சி அம்மன் கோவில் தேர்த் திருவிழா நாளை ஞாயிறு காலை நடைபெறுகிறது. பகல் 12 மணியளவில் ஆதீன கர்த்தா ஸ்ரீலஸ்ரீ பரமாச்சார்ய சுவாமிகளது பிரதம சிஷ்யன் ஊரெழு பிரம்மஸ்ரீ வை. நித்தியானந்த சர்மா 'பக்தகௌரி' என்னும் பொருள்பற்றி இன்னிசை விரிவுரை நிகழ்த்துவார்.

# வேலைக்கிருந்தஇடத்திலேயே இருடமுயன்ற வாலிபன்

(மாவிட்டபுரம்)

தமது எஜமானரது கடையிலேயே திருட முயன்ற வேலைக்காரவாலிபன் ஒருவன் எதிர்பாராதவிதமாக எஜமானர் அங்கு வந்து சேர்ந்தபோது கதவுத் தாழ்ப்பாள் தடியால் அவரைத் தாக்கியதான குற்றச்சாட்டின்மீது கைதான கந்தசாமி என்ற வாலிபன் றிமாண்டில் வைக்கப்பட்டார்.

பன்னாலையைச் சேர்ந்த எஸ். சிவபாலசுப்பிரமணியம் என்பவரது கடையில் வேலைக்கு நின்ற வி. கந்தசாமி என்னும் 17 வயது வாலிபனே இவ்வாறு தமது எஜமானரைத் தாக்கியதாக றிமாண்டில் வைக்கப்பட்டான்.

மேற்படி நபரது கடையும், வீடும் ஒன்றாக இருந்துவந்ததாகவும் சம்பவதினம் இரவு மேற்படி நபர் கடையினுள் படுத்திருந்ததாகவும் வேலைக்கார வாலிபன் அருகில் வீட்டின் குசினியுள் படுத்திருந்ததாகவும் நடுநிசியில் குசினியிலிருந்து வெளியேறிய வேலைக்கார வாலிபன் கடையின் ஓட்டைப் பிரித்துக்கொண்டு உள்ளே இறங்கி கடையினுள் படுத்திருந்த எஜமானருக்கு அரவம் கேட்காதவிதத்தில் கடையின் மேசை லாச்சியினுள்ளிருந்த பணத்தைத் திருட முயன்ற சமயம், எதிர்பாராதவிதமாக எஜமானர் விழித்துக்கொண்டதாகவும், அவர் தன்னை நெருங்கியதும் தனது குட்டு வெளிப்பட்டுவிட்டதே என்ற பயத்தில் அங்கிருந்த கதவுத் தாழ்ப்பாள் தடியால் எஜமானரைத் தாக்கியதாகவும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

தலையில் பலத்த காயமடைந்த எஜமானர் யாழ். ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டு சிகிச்சை பெற்றுவருகிறார்.

ஓடித்தப்ப முயன்ற வேலைக்காரச் சிறுவன் அயலவர்களால் பிடிக்கப்பட்டு காங்கேசன்துறைப் பொலிசில் ஒப்படைக்கப்பட்டார்.

பொலிசார் அவரை மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்த சமயம் நீதிபதி திரு. டி. ஜேசுரத்தினம் அவரை றிமாண்டில் வைக்கும்படி உத்தரவிட்டார்.

பொலிசார் புலன்விசாரணை செய்துவருகின்றனர்.

# மலகூடத்தில் வீசிய சிசு

[கொழும்பு]

திருமணமாகாத இளம் பெண்ணால், மலசலகூடக்குழிக்குள் வீசப்பட்ட சிசு, பொலிசினால் உயிருடன் மீட்கப்பட்டது.

சகோதரியுடன் நோர்ட்டன் பிரிட்ஜ் பகுதியில் வாழ்ந்து வந்த அலிஸ் நோனா என்ற இப் பெண், குழந்தையை மலகூடக் குழிக்குள் வீசிவிட்டு வீட்டைவிட்டு வெளியேறியதாகவும் அவரது சகோதரி ஜேன்நோனா, இதுபற்றிப் பொலிசாருக்குப் புகார்செய்ததைத் தொடர்ந்து, பொலிசார் அச்சிசுவை உயிருடன் மீட்டதாகவும் தெரியவந்தது.

ஹட்டன் நீதவான் முன்னிலையில், சிசு ஆஜர்செய்யப்பட்டபோது நீதவான் சிசுவை சகோதரியிடம் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார். (க-அ


## சுசி

∴ கலண்டர்கள்
∴ டயறிகள்
∴ பிளாஸ்டிக் டயறிகள்

மொத்தமாகவும் சில்லறையாகவும் கிடைக்கும்

V

வடபகுதி விநியோகஸ்தர்கள்

S. P. சாமி அன் கொம்பனி

193, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.


### யாழ்ப்பாணத்தில்

# கிராமிய நாடகங்கள் ஒலிப்பதிவு

(அரியாலை)

இலங்கை வானொலி கிராமியப் பாடல் குழுவினர் வடபகுதிக்கு விஜயம் செய்து பல கிராமிய நாடகங்களை ஒலிப்பதிவு செய்தனர்.

திரு. தாசீசியஸ் தலைமையில் வந்த குழுவினர், அண்ணாவியார் இசைத்தென்றல் ஞா. அந்தோனிப்பிள்ளை எழுதி நெறிப்படுத்திய வண்ணார்பண்ணை இந்துமகளிர் கல்லூரியின் 'கீதா கல்யாணம்' என்னும் நாட்டுக்கூத்தையும், நாட்டுக்கூத்துக் கலாநிதி பூந்தான் யோசேப் நெறிப்படுத்திய 'மனம்போல மாங்கல்யம்' என்ற தென்மோடி நாடகத்தையும், பாஷையூர் 'ஞான சௌந்தரி' என்னும் நாட்டுக்கூத்தையும், கொழும்புத்துறை நாடகமன்றத்தின் 'புனிதவதி' என்ற நாட்டுக்கூத்தையும், அரியாலை மேற்கு சாந்தி சனசமூக நிலையத்தின் ஆதரவில் நாட்டுக்கூத்து வேந்தன் நா. கணபதிப்பிள்ளை ஆக்கிய 'கோவலன்' நாட்டுக்கூத்தையும் ஒலிப்பதிவு செய்தனர்.

ஒலிப்பதிவு வேலைகளை திரு. வாசகர் கண்காணித்து நெறிப்படுத்தினர். (அ)

# கூப்பன் கணக்கெடுப்பு: உடுப்பிட்டி எம்.பி. விளக்கம்

(யாழ்ப்பாணம்)

"உடுப்பிட்டித் தொகுதியில் நடைமுறையில் இருக்கும் அரிசிப் பங்கீட்டுப் புத்தகங்கள் கணக்கெடுப்பு வேலைகளில் நியமிக்கப்பட்ட உத்தியோகஸ்தர்கள் நியமனம் அனைத்துக்கும் எனது சிபாரிசு வழங்கப்படவில்லை என உடுப்பிட்டித் தொகுதி தேசிய அரசுப் பேரவை உறுப்பினர் திரு. த. இராஜலிங்கம் தெரிவித்தார்.

"இன்று எனது தொகுதியில் இப்பிரச்னையைப் பெரிதுபடுத்தி விஷமத்தனமான பிரச்சாரங்களில் சிலர் ஈடுபடுவது குறித்து வருந்துகின்றேன். நான் தற்போது தேசிய அரசுப் பேரவையின் வரவு-செலவுத்திட்ட விவாதங்களில் கலந்துகொண்டிருப்பதால், இந் நியமனங்கள் அனைத்தும் இரு உதவி அரசாங்க அதிபர்களால் நியமிக்கப்பட்டனர். இந்நியமனங்களுக்கு யார் யாரை நியமிக்கவேண்டுமென்றோ அல்லது நான் நியமனம் வழங்கும்படி கூறியதாகக் கூறும் எவருக்குமோ நியமனம் வழங்கப்பட வேண்டுமென எச்சந்தர்ப்பத்திலும் நான் கோரவில்லை. எனவே இவ்வித பிரச்சாரங்களுக்கு மக்கள் செவி கொடுக்க வேண்டாமென கேட்டுக்கொள்கிறேன் என்று திரு. இராஜலிங்கம் கூறினர். (செ)

# காரைநகர் டிப்போ வெற்றி

(யாழ்ப்பாணம்)

இ. போ. ச. காரைநகர் டிப்போவுக்கும் பருத்தித்துறை டிப்போவுக்குமிடையே நடைபெற்ற சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் காரைநகர் கோஷ்டி ஒரு கோலால் வெற்றிபெற்றது.

பருத்தித்துறை யூனிட்டெட் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில் இரு கோஷ்டிகளும் கடுமையாக மோதியபோதிலும் இடைவேளைவரை இரு கோஷ்டிகளும் ஒரு கோலும் போடவில்லை. இடைவேளையின்பின் காரைநகர் கோஷ்டியைச் சேர்ந்த எஸ். தியாகராஜா ஒரு கோலைப் போட்டார். திரு. எஸ். பாலன் மத்தியஸ்தராகக் கடமையாற்றினர். (அ)


## மரண அறிவித்தல்
### வே. மாணிக்கவாசகர்

வே. மாணிக்கவாசகர் J. P. Proctor காலமானார். இவர் காலம்சென்ற பரஞானத்தின் அன்புக் கணவரும், M. மகாதேவன் (அதிபர் கொக்குவில் இந்துக்கல்லூரி), திருமதி R. சதாசிவம் (ஆசிரியை கொக்குவில் இந்துக் கல்லூரி), திருமதி. S. சிவநாராயணமூர்த்தி (ஆசிரியை, சாவகச்சேரி இந்துக் கல்லூரி), M. வாமதேவன் (ஆசிரியர் றோயல் கல்லூரி), திருமதி K. ரங்கநாதன் (U. S. A.), M. சுப்பிரமணியசிவம் (சத்திரசிகிச்சை நிபுணர், அரசினர் வைத்தியசாலை பதுளை), ஆகியோரின் தந்தையும், திருமதி. R. மகாதேவன், திரு. C. சதாசிவம், திரு. S. சிவநாராயணமூர்த்தி, திருமதி M. வாமதேவன், திரு A. ரங்கநாதன் (U S.A.), திருமதி. B. சுப்பிரமணியசிவத்தின் மாமனும் ஆவார்.

பூதவுடல் தகனக்கிரியைக்காக அன்னாரது இல்லத்திலிருந்து கொக்குவில் பொதுமயானத்துக்கு சனிக்கிழமை 24-12-77 பிற்பகல் 3 மணியளவில் எடுத்துச் செல்லப்படும்.

அன்பர்களும் உறவினர்களும் இவ்அறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

8000

# இராணுவ ஆயுதங்களை மீட்பதுகுறித்து அமைச்சரவை முடிவுசெய்யும்

## '61 எம்.பி.க்கள்' குறித்து பிரதி அமைச்சர் தகவல்

[கொழும்பு]

1971-ம் ஆண்டு தலைதூக்கிய ஏப்ரல் கிளர்ச்சியின் போது, பாதுகாப்பின் பொருட்டு அறுபத்தொரு எம். பி.க்களுக்கு கடந்த அரசாங்கம் இராணுவத்துக்குரிய ஆயுதங்கள் வழங்கப்பட்டன என்று பிரதி பாதுகாப்பு அமைச்சர் திரு. டி. பி. வெரப்பிட்டிய நேற்று முன்தினம் தேசிய அரசுப்பேரவையில் தெரிவித்தார்.

மாவத்தகம எம். பி. திரு. ஜி. எம் பிரேமச்சந்திரவின் கேள்விகளுக்குப் பேரவையில் பதிலளிக்கையில் தான் பிரதி அமைச்சர் வெரப்பிட்டிய இத்தகவலை வெளியிட்டார்.

இராணுவ ஆயுதங்கள் வழங்கப்பட்ட 61 பேரில் சிங்கள், தமிழ், முஸ்லிம் எம். பி.க்கள் அடங்குவர் என்று தெரிவித்த பிரதி அமைச்சர், இந்த ஆயுதங்களை மீண்டும் (திரும்பப்) பெற்றுக்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்றும், திரும்ப ஒப்படைக்காதவர்கள், ஒப்படைக்கமறுப்பவர்கள் மீது எந்தவிதமான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அமைச்சரவை விரைவில் கூடி முடிவுசெய்யும் என்றும் தெரிவித்தார்.

"இராணுவ ஆயுதங்களில் ஒரு பகுதியாக துப்பாக்கிகள் இந்த எம். பிக்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. இவற்றை திரும்பப் பெறுவது சம்பந்தமான அறிவிப்புகள் அரசாங்க அதிபர்கள் மூலமாகச் சம்பந்தப்பட்ட எம். பி.க்களுக்கு வழங்கப்பட்டுள்ளன" என்றும் பிரதி அமைச்சர் வெரப்பிட்டிய தெரிவித்தார்.

இராணுவ ஆயுதம் பெற்ற அந்த அறுபத்தொரு எம். பி.க்களும் வருமாறு:-

இவர்களில் சிலர் இப்பொழுதும் எம். பி.க்களாக இருக்கின்றனர்.

**61 எம். பி. க்கள்:**

திருவாளர்கள் ஆரியதாச அளுத்கமகே, அப்புஹாமி காமினி ஆரியதிலகா, பண்டார, பாலசூரியா, ஆர். எம். பண்டார, திஸநாயக்கா, எதிரிசூரிய, பொன்சேகா, ஹேரத், எம். பி. ஹேரத், நந்தாஎல்லவெல, ஜினதாச, ஜயசூரிய, ஜயரத்ன, ஜயசுந்தர, ஏ.எம். ஜயவர்த்தன, பீட்டர்கெனமன், கருணாரத்ன, அல்பேர்ட் காரியவாசம், லியோ, மெண்டிஸ், மங்கள முனசிங்கா, நாணயக்கார, டாக்டர் என். எம். பெரேரா, லக்ஷ்மன் ராஜபக்ஷ, கே பி. ரத்நாயகா, ஜோர்ஜ் ராஜபக்ஷா பி. ஆர். ந த. ரத்நாயக்கா, ரத்னமல்ல, மகிந்த ராஜபக்ஷா, சமரசிங்கா, சிறிசேன, செனிவரத்ன, சமரசேகர, சேனரத் சோமரத்ன, முன்னாள் சபாநாயகர் ஸ்டான்லிதிலகரத்ன, தென்னக்கூன், ரி. பி. தென்னக்கூன், வை. பி. துடாவெ, ரத்னசிறி விக்கிரமநாயக்கா, வன்னியாராச்சி, டாக்டர் எஸ். ஏ. விக்கிரமசிங்க, வெலிகம, விஜயசிங்க, விஜயசேகர, விக்கிரமரத்ன, ரதனதேசப் பிரியசேனநாயக்கா, விமல வீ. ஆனந்தசங்கரி, எக்ஸ். எம். செல்லத்தம்பு, பீ. ஆர். செல்வநாயகம், எம். ஸி. சுப்பிரமணியம்.

எம். ஸி. அஹமட், ஏ. எல். அப்துல்மஜீத், ஏ. எம். அப்துல் மஜீத், ஏ. அஸீஸ், ஏ. ஏ. காதர், எம். எம். முஸ்தாபா. இராணுவத்துப்பாக்கி வழங்கப்பட்டவர்களில் எம்.பி.க்கள், அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் எல்லோரும் அடங்குவர். (ம)

## நன்கொடை

[கொழும்பு]

பிரிட்டன் இலங்கைக்கு 11 கோடியே 20 லட்ச ரூபாவை நன்கொடை உதவியாக வழங்குகிறது. இதற்கான நாலு ஒப்பந்தங்களில் நிதிஅமைச்சு செயலாளர் டாக்டர் லால் ஜயவர்த்தனவும் பிரிட்டிஷ் தூதர் திரு. டி. பி. அயர்ஸும் இம்மாதம் கைச்சாத்திட்டனர். சுகாதார, போக்குவரத்துச் சேவைகளைச் சீர்திருத்துததற்கும் விவசாயப் பொருட்களைச் சேமிக்கும் வசதிகளை ஏற்படுத்துவதற்கும்இப் பணம் உபயோகிக்கப்படும்.

இத்தொகையில் இரண்டு கோடியே 10 லட்சம் ரூபாவுக்கு 120 லான்ட்ரோவர் வாகனங்கள் சுகாதார இலாகாவின் மலேரியா ஒழிப்பியக்கத்துக்காகத் தருவிக்கப்படும். இவ்வியக்கத்துக்கென பிரிட்டனால் உறுதியளிக்கப்பட்ட இரண்டரை மில்லியன் பவுண் தொகையில் இது முதலாவது தவணைத் தொகையாகும்.

எட்டுக்கோடியே 80 லட்சம் ரூபாவைக் கொண்டு இ. போ. ச., ரயில்வே, இலங்கை ட்ராக்டர் கூட்டுத்தாபனம், கொழும்பு துறைமுக ஆணைக்குழு ஆகியவற்றுக்கு அவசியம் தேவையான உபபாகங்கள் வாங்கப்படும்.

## பீலிக்ஸ்—பௌஸி முதலியோர் மீது விரைவில் நடவடிக்கை

[கொழும்பு]

கொழும்புமாநகரசபை ஊழல்கள் தொடர்பாக விசாரணை நடத்திய ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவின் முடிவுகளையொட்டி சம்பந்தப்பட்டவர்கள்மீது நடவடிக்கை எடுப்பதெனஅரசாங்கம் முடிவு செய்திருப்பதாகத் தெரிகின்றது.

திரு. ஜி. பி. ஏ. சில்வா தலைமையிலான இந்த ஆணைக்குழுவின் அறிக்கையில் முன்னாள் அமைச்சர் பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா, முன்னாள் மேயர் ஏ. எச். எம். பௌஸி மாநகரசபையைச் சேர்ந்த ஒரு இன்ஸ்பெக்டரான ஏ. டபிள்யு. எம். ஹம்ஸா, மாநகர வரிமதிப்பாளர் பிரிவைச் சேர்ந்த எஸ். சிவனடியான், உதவி வரிமதிப்பாளர் எம். எஸ். எம். ஸரூக் ஆகியோர் தொடர்பாக குற்றச்சாட்டுக்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

இவர்களுக்கு எதிராக என்ன மாதிரி குற்றப்பத்திரிகைகளை தயாரிப்பதென்று தீர்மானிக்கும்படி சட்டமாஅதிபர் கேட்டுக்கொள்ளப்படவிருக்கிறார்.

மேயராக இருந்தகாலத்தில் ஜனாப் பௌஸி பாரதூரமானமுறையில் ஒழுங்கீனங்களைப் புரிந்துள்ளதாகவும் சட்டவிதிகள் பலவற்றை மீறியுள்ளார் என்றும் சபைக்கு பெருமளவில் நஷ்டம் ஏற்படுத்தியுள்ளார் என்றும் ஆணைக்குழுவின் இடைக்கால அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த ஒழுங்கீனங்களைப் புரிவதற்கு முன்னாள் அமைச்சர் திரு. பீலிக்ஸ்டயஸ் பண்டாரநாயக்கா ஓரளவுக்கு உடந்தையாக இருந்துள்ளார் என்றும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்விருவரும் ஆணைக்குழுவின்முன் பொய்ச்சாட்சி மகூறியதாகவும் தெரிவிக்ப்பட்டுள்ளது.

## 'சமசமாஜிகளுக்கு அரசைக் குறைகூற அருகதையில்லை'

### போக்குவரத்து அமைச்சர் கூறுகிறார்

(காலி)

"முன்னைய அரசின் நடவடிக்கைகளில் அதிருப்திகொண்டதில் இந்த அரசாங்கத்தை மக்கள் பெரும்பான்மைப் பலத்துடன் தெரிவு செய்தார்கள். அதனால் இந்த அரசாங்கத்தைப் பாதுகாப்பதற்கும் அவர்களுக்கு உரிமையுண்டு."

இவ்வாறு காலி பஸ் நிலையத்தில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசுகையில் போக்குவரத்து அமைச்சர் ஜனாப் எம். எச். முகமது குறிப்பிட்டார். காலி புதிய பஸ் நிலையத்துக்கான அடிக்கல் நாட்டு வைபவத்தையடுத்து இக்கூட்டம் நடைபெற்றது. அமைச்சர் கூட்டத்திற்குத் தலைமைவகித்துப் பேசினார்.

"இன்றையதினம் காலியைப் பொறுத்தமட்டில் மிக முக்கியமான தினமாகும். இங்கு புதிய பஸ் நிலையம் ஒன்றின் தேவை வெகுகாலமாகவே நிறைவேற்றப்படாமல் இருந்துவருகின்றது. பல காரணங்களால் கடந்த இருபது வருடங்களாக இது நிறைவேற்றப்படவில்லை. புதிய அரசாங்கம் தேர்தல் காலத்தில் அளித்த வாக்குறுதிகள் அனைத்தையுமே நிறைவேற்றும்" என்றார் அமைச்சர்.

"அரசியல் சந்தர்ப்பவாதிகளில் இனி இடமில்லை. ஏனென்றால் அரசியல் என்னவென்பதை மக்கள் உணர்ந்துவிட்டார்கள். வரப்போகும் 'ஹர்த்தால்' அரசுக்குப் பெரிய அடியாக விழப்போகிறது என்று சமசமாஜக் கட்சித் தலைவர் டாக்டர் என். எம். பெரேரா கூறியிருப்பதாக அறிகிறேன். இந்த அரசைக் கண்டிக்க இவர்களுக்கு அருகதையில்லை. ஏனென்றால் பதவியிலிருந்த காலத்தில் அவர்கள் ஏழை மக்களை மறந்துவிட்டு அவர்கள்மீது மேலும் பாரத்தை ஏற்றிவந்தார்கள். சமசமாஜக் கட்சியைச் சேர்ந்தவரான இன்னொருவர்தான் திரு. லெஸ்லி குணவர்த்தன. இவர் அமைச்சராக இருந்த காலத்தில் இ. போ. ச. மிக மோசமாக நிர்வகிக்கப்பட்டது" என்றார் ஜனாப் முகம்மது.

காலி எம். பி. திரு. அல்பர்ட் சில்வா பேசும்போது,

[5-ம் பக்கம் பார்க்க]

## 'சமயத்தில் ஆராய்ச்சிக்கு இடமில்லை' —கலாநிதி கைலாசநாதக்குருக்கள்

[யாழ்ப்பாணம்]

"சமயம், நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டது. சமயத்தில் ஆராய்ச்சிக்கு இடமில்லை. எமது நாட்டுச் சமய முறைக்கும், மேலைநாட்டுச் சமய முறைக்கும் அதிக வேறுபாடுகள் உண்டு. இங்கே சமயமும், தத்துவமும் ஒன்றோடு ஒன்று இணைந்தும் பிணைந்தும் செல்வதைக் காணலாம். ஆனால் மேலைநாட்டிலே சமயத்துக்கும், தத்துவத்துக்கும் முரண்பாடுகள் உண்டு. தத்துவ ஆராய்ச்சியின் மூலமாகப் பல உண்மைகளை அறியலாம். ஆனால் அவைகள் உண்மையாக மாத்திரமிராமல் அனுபவத்தோடு சம்பந்தப்பட்டனவாக இருத்தல்வேண்டும். சமய அடிப்படையில் வாழ்கின்ற ஒருவன், தத்துவக் கருத்துக்களை அறிந்திருத்தல் அவசியம். மேலை நாட்டில் தத்துவ ஆராய்ச்சி ஒரு பொழுதுபோக்காகவே கருதப்படுகிறது. அங்கு நாஸ்திகன் கூடத் தத்துவ ஆராய்ச்சி செய்கிறான்,"

இவ்வாறு காரைநகர் மணிவாசகர் சபையினர் ஈழத்துச் சிதம்பரத் தேவஸ்தானத்தில் நடத்திவரும் மணிவாசகர் விழாவின் இரண்டாம் நாள் நிகழ்ச்சிகளுக்குத் தலைமைதாங்கிப் பேசும்போது இலங்கைப் பல்கலைக்கழக யாழ்ப்பாண வளாக இந்து நாகரீக பீடத் தலைவர் கலாநிதி கா. கைலாசநாதக்குருக்கள் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

"திருவாசகம் ஓர் அருள் நூலாகும். உலக இலக்கியத்திலுள்ள கவிதைகளுள் திருவாசகம் ஒரு தனியிடத்தை வகிக்கின்றது. அந்நூல் சமய நூலென்ற அளவில் நின்றுவிடாது, தத்துவக் கருத்துக்கள் மலிந்த நூலாகவும், இலக்கிய நயம் செறிந்த நூலாகவும், தமிழ்மக்கள் எல்லோராலும் பயிலப்பெற்றுவரும் தனிச்சிறப்புடையதாகவும் விளங்குகிறது." [இ]

## 'பற்று நீங்கினால்தான் பிறவிப்பகை ஒழியும்'

(யாழ்ப்பாணம்)

"எண்ணில்லாத நெடுங்காலமாக எண்ணில்லாத பல பிறவிகளை எடுத்துக்கொண்டே இருக்கிறோம் நாம். பிறவாநிலனும் இல்லை, இறவா நிலனும் இல்லை. இங்ஙனம் ஓயாமல் பிறவி வந்துகொண்டே இருக்கிறது. இதற்குக் காரணம்? நம்மை விடாமல் ஒன்று பற்றிக்கொண்டிருப்பதே. அது நம்மை எப்பொழுது விட்டு நீங்குகிறதோ, அப்பொழுதுதான் பிறவிக் கடலினின்றும் கரையேறி முத்தி வீடு சேரலாம்."

இவ்வாறு நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் திருவெம்பாவையை முன்னிட்டுத் தினமும்தொடர்ந்துநிகழ்த்தப்பட்டுவருகின்ற திருவாதவூரர் புராண இன்னிசை விரிவுரையில் ஆதீனகர்த்தர் ஸ்ரீலஸ்ரீ சுவாமிகளது பிரதம சிஷ்யன் பிரம்மஸ்ரீ வை. நித்தியானந்த சர்மா கூறினார்.

"பற்று என்ற ஒன்று நம்மை மிக அழுத்தமாகப் பற்றிக்கொண்டிருக்கிறது அப்பற்று நம்மை விட்டு நீங்கினால் தான் பிறவிப்பகை ஒழியும். பற்றற்றபோது பரமன் திருவருள் புரிகிறான்" என்று அவர் மேலும் கூறினார். (அ)

Melville Assauw Designs

BAYER

விவசாய இரஷாயனப் பொருள்

குரெட்டர் 3% மணிகள்

பாவித்து
நெற்பயிரைத் தாக்கும் இலை
தத்தி உட்பட மற்றும் பூச்சிகளையும்
கட்டுப்படுத்தவும்

தயாரித்து விரியோகிப்போர்

ஹேகெம் லிமிட்டட்

400, டீன்ஸ் வீதி, கொழும்பு தொலைபேசி : 93563 - 96331 - 6

# 'மொழி, மதத்தைக் காப்பது இன்று மக்கள் கடமையே'

## பெற்றோர்தின விழாவில் 'அமிர்'

(சுழிபுரம்)

"ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் தமிழும், சைவமும் அழியாது காக்கும் வகையில் கல்வி நிலையங்களை நடாத்திப்பெரும் தொண்டாற்றினார். அவரது வழியில் சைவவிருத்திச் சங்கத்தினர் தொண்டாற்றினர். இன்றுபாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்றுள்ளதால் நமது மொழியையும், மதத்தையும் காக்க மக்களே முன்வரவேண்டும்."

இவ்வாறு சுழிபுரம் வடக்கு ஆறுமுகவித்தியாசாலைப் பெற்றோர் தினவிழாவில் எதிர்க்கட்சித் தலைவரும் காங்கேசன்துறைத் தொகுதி எம். பி. யுமான திரு. அ. அமிர்தலிங்கம் பேசுகையில்,

"பாடசாலைக்கு தங்கள் பிள்ளைகளை அனுப்பிவிட்டால் மட்டும் கடமை முடிந்துவிட்டதாக பெற்றோர் எண்ணக்கூடாது. ஆசிரியர்களுடன் ஒன்று சேர்ந்து உழைக்கவேண்டும். அரசிடம் இருந்துபெற வேண்டியவற்றையும் பெற்றுக் கொள்ளவும்வேண்டும்" என்றார்.

வட்டுக்கோட்டைத் தொகுதி எம். பி. திரு த. திருநாவுக்கரசு பேசுகையில், "பாடசாலையின் தேவைகள் எதுவோ அவற்றை நாம் நிறைவேற்றி வைப்பதில் கூடிய கவனம் செலுத்துவோம். இன்று இன்று அரசாங்கம் சொல்லுவது ஒன்றும் செய்வது வேறு ஒன்றுமாகவுள்ளது. இங்களப் பகுதியில் ஒன்றும் தமிழ்ப் பகுதியில் வேறு ஒன்றும் நடைபெறுகின்றது" என்றார்.

விழாவுக்குத்தலைமை வகித்த பாடசாலை அதிபர் திரு. மு விருத்தாசலம் பேசுகையில் கூறியதாவது:

"ஒரு பாடசாலையின் ஆசிரியர்களும், பெற்றோர்களும் இரட்டைமாடுகளாவர். பாடசாலை சிறப்பாக இயங்க இரு பகுதியினரும் ஒன்றுபட்டு இயங்கவேண்டும். அப்போது தான் பாடசாலையின் தேவைகள் நிறைவேறவும் மாணவர்கள் சிறப்பாகக் கல்விபெறவும் முடியும். அன்று முதல் இன்று வரை சைவம் தமிழ் இரண்டும் எங்கள் பாடசாலையால் வளர்க்கப்படுகின்றது. இதை மேலும் வளர்க்க எமக்கு எல்லாவகையிலும் ஒத்துழைப்பு யாவரும் தரவேண்டும்."

கலைநிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. (அ)

## இடமாற்றங்கள்

[வவுனியா]

புத்தளம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றும் திரு எஸ். இராஜசிங்கம் ஜனவரி முதல் முருங்கன் பொலிஸ் நிலையத்திற்கும், கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் சப் இன்ஸ்பெக்டர் ஜனாப் எம். என். ஹமீட் ஜனவரி முதல் மன்னார் பொலிஸ் நிலையத்திற்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்கள்.

மூதூர் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியான திரு. பி. ஆயுபாலா ஜனவரி முதல் ஊர்காவற்றுறைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

ரத்கம பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றும் திரு. என். ஆர். வராக்கொட ஜனவரி முதல் கிளிநொச்சி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியாகஇடமாற்றம் பெற்றுள்ளார்.

வவுனியாவின் உதவிப் பொலிஸ் அதிபர்களான திரு. செனிவிரட்ணபண்டா இரத்தின புராவிற்கும், திரு. வை. பி. வி. பெரேரா அவிசாவலைக்கும் எதிர்வரும், ஜனவரி முதல் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்கள்.

## 'இன ஐக்கியத்திற்காக கதீப்மார் சம்மேளனம் உழைக்கும்'

(யாழ்ப்பாணம்)

"இலங்கையில் வாழுகின்ற சகல இனங்களும் ஐக்கியமாக வாழ்வதற்குச் சகலதுறைகளிலும் முன்னின்று உழைக்க கதீப்மார்களின் மத்திய சம்மேளனம் உறுதிபூண்டுள்ளது. மனிதனின் உலோகாயத ஆசைகளே பிரச்னைகளைத் தூண்டுவதற்கும், அமைதியின்மைக்கும் அடிப்படைக்காரணமாகும். தார்மீக சிந்தனைகளை மிகச்சிறந்த முறையில் வகுத்துத்தந்துள்ளஇஸ்லாம், மனித இனத்தைச் சமத்துவமாகக் கணிக்கின்றது. குறுகியஇச்சைகளுக்கும், பேதங்களுக்கும் அப்பாற்பட்டு அகில உலக சகோதரத்துவ அமைப்பை ஏற்படுத்துவதில் இஸ்லாம் சிறப்பான வெற்றிகண்டுள்ளது. உலமாக்களும், தர்மகர்த்தாக்களும், கதீப்மார்களும் ஒன்றுபட்டுள்ளஇந்தஅமைப்பு,இலங்கை முழுவதிலும் எல்லா முஸ்லிம்களினதும் பூரண ஆதரவைப் பெற்றுள்ளது"

இவ்வாறு மானிப்பாய் வீதி முஹிய்யதீன் பள்ளி வாசலில் நடைபெற்ற உலமாக்கள், கதீப்மார்கள், தர்மகர்த்தாக்கள் மகாநாட்டுக்குத் தலைமை தாங்கி உரைநிகழ்த்திய அகில இலங்கை கதீப்மார்களின் மத்திய சம்மேளனத் தலைவரும், இலங்கைப் பல்கலைக்கழக யாழ்வளாக அறபு இஸ்லாமிய நாகரிகத்துறை விரிவுரையாளருமாகிய மௌலவி கே. எம். எச். காலிதீன் குறிப்பிட்டார்.

மௌலவி மீராமுஹிய்யதீன் ஆலிம் 'கிருஅத்' ஓதி ஆரம்பித்து வைத்த இந்த மகாநாட்டில் சம்மேளனத்தின் சப்ரகமுவ மாகாணத்தின் உபதலைவர் மௌலவி எம். ஐ. எம் யூசுப் மௌலானா உரைநிகழ்த்தும் போது, "அண்மையில் மத்திய மாகாணம், தென் மாகாணம் ஆகிய நகரங்களில் ஏற்பட்ட இனக்கலவரத்தின் போது பாதுகாப்பு நடவடிக்கைகளிலும் தமிழ்ச் சகோதரர்களைக் காப்பாற்றுவதிலும் எமது சம்மேளன உறுப்பினர்கள் கூடியபங்கெடுத்தனர். எமது சம்மேளனத் தலைவரின் பணிப்புரைகளை நாம் எப்பொழுதுமே நம்பிக்கையுடன் செயல்படுத்தி வந்துள்ளோம்" எனக் குறிப்பிட்டார்.

சம்மேளனத்தின் தனாதிகாரி மௌலவி ஏ. ஸி. எம். சதக்கத்துல்லா, மௌலவி எம். ஏ. அப்துல் ரஸ்ஸாக்,மௌலவி எம். ஐ. எம். ஹனிபா, ஆசிரியர் ஜனாப் எம். உமர், ஆசிரியர் ஜனாப் ஏ. அப்துல்கையூம் உட்பட பலர் உரையாற்றினர். (அ)


## திருவெம்பாவை பூஜைக்கு

தேவையான

- விளக்கு கூடம்
- அபிஷேக திரவியங்கள்
- அபிஷேகச் சந்தனம் (உடன் யந்திரத்தினால் அரைக்கப்பட்டது)
- அபிஷேகக் குங்குமம்
- அபிஷேக விபூதி
- அபிஷேக வாசனைதிகள்;பன்னீர்; அத்தர்
- கற்பூரம், சாம்பிராணி,ஊதுபத்திகள்
- நைவேத்தியப் பொருட்கள் (அவல், கற்கண்டு, சர்க்கரை முதலியன)

மற்றும்

சகல சாமான்களும் நிதானமான விலையில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

கடந்த 42 ஆண்டுகளாக நற்சேவை புரிந்து நற்பெயர் பெற்றவர்கள்.

### எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி,

(மருந்து, மருந்துச்சரக்கு, வாசனைதிகள் இறக்குமதியாளர்களும் மொத்த, சில்லறை, வியாபாரிகளும்)

191, கே. கே. எஸ். ரோட், பெரியகடை, யாழ்ப்பாணம்.

"பாலேந்திரா பில்டிங்" 160, செட்டியார் தெரு, கொழும்பு-11.

போன்: 541 Residence 7068 கொழும்பு: 35825


## ஈழத்துச் சிதம்பரத்தில் நாளை பஞ்ச ரத பவனி

ஈழமணித் திருநாட்டின் வரலாற்றிலும், இலக்கியத்திலும், புராணங்களிலும் இடம் பெற்ற தலங்கள் பல உள. அவற்றுள் ஒன்று ஈழத்துச் சிதம்பரம் என்று புகழ்பெற்றுள்ள மிக அற்புதமான காரைநகர் திண்புரச் சுந்தரேசுவரர் ஆலயமாகும்.

இங்குள்ள சுவாமி பெயர் சுந்தரேசுவரர், அம்பாள்பெயர் சௌந்தராம்பிகை. அரசு, வன்னி, இருப்பை என்பன தலவிருட்சங்கள், பரமானந்த கூபம், சித்தாமிர்தவாவி, துர்வாசசாகரம் ஆகிய தீர்த்தங்களும் உள்ளன. இவ்வாலயத்தின் இப்போதைய பிரதம அர்ச்சகரின் பெயரும் மங்களேசுரவக் குருக்களாகும். சுவாமி உற்சவம் பங்குனியிலும், அம்பாள் உற்சவம் ஆனியிலும் நடைபெறுகின்றன. மார்கழியில் நடைபெறும் திருவெம்பாவைஉற்சவம் மிகப் பிரசித்திபெற்றது. ஒன்பதாம் நாள் நடைபெறும் நடராஜர் ரதாரோகணமும் அன்றிரவு நடைபெறும் ஆருத்ரா அபிஷேகமும் விசேஷமுக்கியத்துவமுடையன. இந்த உற்சவங்கள் தில்லைச் சிதம்பரத்தைப் பின்பற்றி மிக விரிவாகவும், சிறப்பாகவும் நடத்தப்படுவதால் இத்தலம் ஈழத்துச்சிதம்பரம் என்று போற்றப்படும். சிதம்பரத்திற்குச் சென்று தரிசிக்க முடியாதவர்களுக்கு ஈழத்துச்சிதம்பரம் ஈழநாட்டவருக்குக் கிடைத்தபெரும் புண்ணிய தலமாகும்.

நாளைக் காலை 9 மணிக்கு நடேசப்பெருமானுக்கு அபிஷேகமும், தொடர்ந்து வசந்த மண்டபப் பூசையும் நடைபெறும்; பகல் 10 மணிக்கு நடேசப்பெருமான் அம்பிகை சமேதராகத் தமிழ்நாட்டிலிருந்து கொண்டுவரப்பட்ட மார்கழிச் செவ்வந்திப் பூக்களினால் அலங்கரிக்கப்பட்ட வெள்ளிச் சாத்துப்படியில் ஈழத்துத் தவில் நாதஸ்வர வித்வான்கள் மல்லாரி இராகம் இசைக்க, ஆனந்தத் தாண்டவம் ஆடிய வண்ணம் தேருக்கு எழுந்தருளுவார். பகல் 1 மணியளவில் பஞ்ச ரதங்களும் ஆலயத்தின் மூன்றும் வீதியை வலம் வரும். பகல் 2 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணி வரை ஈழத்து நாதஸ்வர, தவில் வித்வான்களின் கச்சேரி இடம்பெறும். மாலை 5 மணிக்குச் சுவாமி தேரிலிருந்து இறங்கி ஆலயத்திற்குள் செல்வார்.

### மணிவாசகர் விழா

மாலை நிகழ்ச்சியாக 7 மணிக்குத் தேவார பாராயணத்துடன் மணிவாசகர் விழா ஆரம்பமாகும். இவ்விழாவில் தமிழகப் பேராசிரியர் திரு. சுந்தரமூர்த்தி, புலவர் செல்வி இ. விசாலாட்சிஆகியோர்உரையாற்றுவர். நல்லை ஆதீன வித்வான் பிரம்மஸ்ரீ நித்தியானந்தசர்மாவின் சங்கீதகதாப்பிரசங்கம் இடம்பெறும். இரவு 1 மணி முதல் நடேசர் ஆருத்திரா அபிஷேகம் நடைபெறும்.

ஆலயத்திற்குக் காலை முதல் இரவு வரை காரைநகர் இ. போ. ச. டிப்போவினர் விசேஷ பஸ் சேவைகளை ஒழுங்குசெய்துள்ளனர்.

மணிவாசகர் அன்னதானச் சபையினர் மணிவாசகர் மடாலயத்தில் அன்னதானம் வழங்குகின்றனர்.

### வானொலியில் அஞ்சலி

ரதோற்சவ நிகழ்ச்சிகளை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் நேரடி அஞ்சல் செய்ய ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அடியார்களின் பாதுகாப்பை முன்னிட்டு ஊர்காவற்றுறைப் பொலிசார் விசேஷ சேவை யாற்றுவர். [அ]

—காரைநகர் க.சிறீகரன்

## காரைநகர் மணிவாசகர் விழா

[யாழ்ப்பாணம்]

காரைநகர் மணிவாசகர் சபையின் 23வது மணிவாசகர் விழாவின் முதல்நிகழ்ச்சியாக சடையாளி வயிரவர் கோவிலில் இருந்து பிற்பகல் மூன்று மணிக்கு திருவாசகத்திருமுறை ஊர்வலம் புறப்பட்டு மாலை 6 மணிக்கு விழா நடைபெறும் இடமான ஈழத்துச் சிதம்பர தேவஸ்தானத்தை வந்தடைந்தது. வழிநெடுகிலும் அடியார்கள் நிறைகுடம் வைத்தும் அர்ச்சனை செய்வித்தும் திருவாசகத் திருமுறைக்கு தமது வணக்கத்தைத் தெரிவித்தனர்.

விழா ஆரம்பமானதும் சைவமணி, வித்துவான் மு. சபாரத்தினம் வரவேற்புரை நிகழ்த்தினார். அண்ணாமலைப் பல்கலைக்கழக தமிழ்ப்பேராசிரியர் கு. சுந்தரமூர்த்தி எம். ஏ. அவர்கள் விழாவை ஆரம்பித்துவைத்துப் பேசினார்.

சிவநெறிப்புரவலர் திரு கனகராசாவினால் சைவசமய பாடப்பரீட்சையில் ஒவ்வொரு பிரிவிலும் முதல் 3 இடங்களைப் பெற்ற 18 மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன. இவ்விழாவில் கொழும்புத்துறை ஆசிரிய பயிற்சிக்கலாசாலை விரிவுரையாளர் திரு. க. சிவராமலிங்கம் 'யார் கொலோ சதுரர்' என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றினார். விழா தொடர்ந்து ஞாயிற்றுக்கிழமை வரை நடைபெறுகிறது.

## சொற்பொழிவு

[சுன்னாகம்]

சுன்னாகம் கதிரமலைச்சிவன் கோவிலில் நாளை மாலை பிரம்மஸ்ரீ சோமஸ்கந்தகுருக்கள் தலைமையில் அண்ணாமலை பல்கலைக்கழகப் பேராசிரியர் கு. சுந்தரமூர்த்தி எம். ஏ. 'எங்கள் பிராட்டியும் எங்கோனும்' என்னும் தலைப்பில் சமயச் சொற்பொழிவாற்றுவார்.

## நிர்வாகிகள்

[நெல்லியடி]

வட அல்வாய் இளங்கோ சனசமூக நிலையத்தின் புது வருட நிர்வாகிகள் தெரிவு தலைவர் சி. தங்கத்துரை தலைமையில் நடைபெற்றது. புதிய தலைவராக மு. ஜெயச்சந்திரனும் உபதலைவராக எஸ்.மகேந்திரனும் செயலாளராக து. சிவராஜாவும் பொருளாளராக மா. நடராசாவும் தெரிவு செய்யப்பட்டனர்.

நிர்வாகக்குழு உறுப்பினர்கள் நால்வரும் தெரிவாகினர். [உ]

## கருத்தரங்கு

[வவுனியா]

வவுனியா தொழிற்திணைக்களத்தினால் இம்மாதம் 26-ந் திகதி முதல் மூன்று நாட்களுக்கு 'தொழிலாளர் கல்வியும், குடும்ப நலமும்' என்னும் பொருள் பற்றிய கருத்தரங்கு வவுனியா கூட்டுறவுக்கல்லூரி மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

இக்கருத்தரங்கில் தொழிற் சட்டம், குடும்பநலம் பற்றிய சொற்பொழிவுகள் இடம்பெறவிருக்கின்றன. பல தொழிற் சங்கவாதிகள் இதில் கலந்து கொள்ளவிருக்கின்றனர்.

## காலியிலும் இரவு சந்தை

[காலி]

காலியில் இரவு சந்தையொன்றை ஆரம்பிக்க காலி மாநகரசபை ஏற்பாடு செய்து வருகின்றது.

## ஐக்கிய நத்தார் விழா

[அரியாலை]

ஐக்கிய நத்தார் மகிழ்கீத விழா எதிர்வரும் 26ந் திகதி திங்கட்கிழமை மாலை 6 மணியளவில் நரிக்குண்டு மைதானத்தில் நடைபெறவிருக்கிறது. இவ்விழாவில் சுண்டிக்குளி பரி. யோவான் ஆலயப்பாடகர் குழுவும் நல்லூர் பரி. யாக்கோபு ஆலயப் பாடகர்குழுவும், பாண்டியன்தாழ்வு பரி. அன்னம்மாள் ஆலயப்பாடகர் குழுவும், சுண்டிக்குளி பரி. யுவானியார் ஆலயப்பாடகர் குழுவும் கலந்து கொள்ளவிருக்கின்றன.

கத்தோலிக்க திருச்சபையினரும் அங்கிலிக்கன் திருச்சபையினரும் இணைந்து நடாத்தும் இவ்விழா ஐக்கியவிழாவாக அமையவிருக்கிறது.

ராணி தினசரி 10-30, 2.30, 6·00, 9.30.
[யாழ்ப்பாணம்] எம். ஜி. ஆர்.-விஜயா, நாகேஷ் நடித்த
விவசாயி
(புதிய பிரதி)

வெலிங்டன் [யாழ். நகர்] தினசரி 4 காட்சிகள்
முத்துராமன்-சுஜாதா-ஜெய்கணேஷ்
முத்தான முத்தல்லவோ

லிடோ எம். ஜி. ஆர். — லதா நடித்த
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
(யாழ். நகர்) போன்: 7693
நீதிக்கு தலைவணங்கு

12-வது ஜனத்திரள் வாரம்!
ராஜா தினசரி 10-30, 2-15, 6-15, 9-45
யாழ்நகர் ஜெமினி, விஜயகுமாரி, கே. ஆர். விஜயா நடித்த
தசாவதாரம்
பாடசாலை மாணவர்கள் ஆசனங்களை பதிவுசெய்து கொள்ளவும்.
தந்தை செல்வாவின் இறுதியாத்திரை வெகு விரைவில் இப்படத்துடன் காண்பிக்கப்படும்.

சாந்தி (யாழ். நகர்) போன்: 7642.
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
ஜெமினி - சாவித்திரி (இருவேடங்களில்)
ரங்கராவ், M-R ராதா
காத்திருந்த கண்கள்
(புதிய பிரதி)

மனோஹரா (யாழ் நகர்) தினசரி 4 காட்சிகள்
சிவாஜி- ஜெமினி - லக்ஷ்மி - நிர்மலா
உனக்காக நான்
(ஈஸ்ட்மன் கலர்)

வின்ஸர் யாழ்ப்பாணம் தினசரி 4 காட்சிகள்
கமலஹாசன் ரஜனிகாந்த்
எம்.எஸ்.விஸ்வநாத் ஸ்ரீதேவி-ஓய். விஜயா
மூன்று முடிச்சு
திரை கதை வசனம், டைரக்ஷன்; கே. பாலசந்தர்

ஸ்ரீதர் நத்தார் புதுவருட வெளியீடு!
தினசரி 4 காட்சிகள்
(யாழ்ப்பாணம்) தென்னகத்தில் 100 நாட்களுக்குமேல் ஓடிய வெற்றிச் சித்திரம்
★ முத்துராமன் ★ ஜெயசித்திரா
★ சுந்தரராஜன் ★ ஸ்ரீகாந்த்
வி. கே ராமசாமி, தேங்காய் சினிவாசன் குமாரி பத்மினி நடித்த
அவள் ஒரு தொடர்கதை, பெண் தெய்வம் வரிசையில் மற்றுமோர் வெற்றிப் படைப்பு;
இன்ஸ்பெக்டர் மனைவி
திரைக்கதை - வசனம் - டைரக்ஷன் A. C. திருலோகசந்தர் M. A.
இசை இன்னிசை வேந்தர்கள் சங்கர்-கணேஷ்


யாழ்.நகரில்

# ஹோட்டல் பொருள்களின் விலைகளைக் குறைக்க நடவடிக்கை!

## ஜி. ஏ. தலைமையில் நடந்த மாநாட்டில் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நகரத்தில் சாப்பாடுஉணவுவகைகள், தேநீர், காப்பி, மற்றும் சிற்றுண்டிகளின் விலைகளைக் குறைப்பதற்கு நடவடிக்கைஎடுக்கப்படவிருக்கிறது.

யாழ். அரசாங்க அதிபர் திரு. டபிள்யூ. ஏ. எல். விஜயபால தலைமையில் நேற்றுக்காலை நடந்தமாநாட்டில் மேற்கண்ட முடிவு எடுக்கப்பட்டது.

இம்மகாநாட்டில் மேலதிக அரசங்க அதிபர் திரு. ஏ. ஏ. ஜோசப், உதவி உணவுக்கட்டுப்பாட்டதிகாரி திரு. ஆனந்தன், விலைக்கட்டுப்பாட்டதிகாரி திரு. எஸ். வல்லிபுரம், பொலிஸ் இன்ஸ்பெக்டர் கே பத்மநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

யாழ்ப்பாணத்திலுள்ள ஹோட்டல் தேநீர்சாலை, காப்பிக்கிளப், உரிமையாளர்களை இதுசம்பந்தமாக 78 ஜனவரி 19-ம் தேதி ஒரு மாநாடு நடத்துவதென்றும், அம்மாநாட்டில் விலைகளைக் குறைப்பதற்கான காரணங்களை விளக்கி விலைகளைக் குறைக்குமாறு கோருவதென்றும் முடிவுசெய்யப்பட்டது.

சில முக்கிய அத்தியாவசிய பொருட்களின் விலைகளைக் குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது. விலைக்கட்டுப்பாட்டு உத்தியோகத்தர்கள், பொலிசாரின் உதவியுடன் இவற்றைக் கண்காணிக்க வேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டது.

சலுசலவிலிருந்து துணி பெறும் ஜவுளி வியாபாரிகள் கடைகளில் ஜவுளிகளின் விலைப்பட்டியலை வெளியிட வேண்டுமென்றும், துணிகள் கூடிய விலைக்கு விற்கப்பட்டால் விலைக்கட்டுப்பாட்டு உத்தியோகத்தர்களும், பொலிஸாரும் திடீர்சோதனை நடத்தவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

துணிகளை விலைகூட்டி விற்கும் வர்த்தகர்களின் சலுசலா கோட்டா ரத்துச்செய்ய நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

வடபகுதி மக்களுக்குத் தேவையான உணவுவகைகளை போதியளவு வரவழைக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

ஜனவரி 19-ம் தேதி யாழ். கச்சேரி மண்டபத்தில் நடைபெறும் மகாநாட்டிற்கு யாழ். நகரத்திலுள்ள சகல ஹோட்டல் தேநீர்க்கடை, காப்பிக்கிளப் உரிமையாளர்களையும் அழைப்பதென்று முடிவுசெய்யப்பட்டது.

# குதிரைப்பந்தயப் பிரசுரம் வைத்திருந்தவருக்கு அபராதம்

(மாவிட்டபுரம்)

தடைசெய்யப்பட்ட சட்டவிரோத குதிரைப் பந்தயப் பிரசுரங்களுடன் கைதான நபருக்கு மல்லாகம் நீதிபதி 200 ரூபா அபராதம் விதித்தார்.

கொழும்பிலிருந்து விமானப் பார்சல் மூலம் தமது பெயருக்கு வந்த தடைசெய்யப்பட்ட குதிரைப்பந்தயம் பிரசுரங்களைப் பலாலி விமான நிலையத்திலிருந்து பெற்றுச் செல்ல விமான நிலையத்திற்கு வந்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சி. திருச்செல்வம் என்பவர் அங்கு விரைந்த காங்கேசன்துறைப் பொலிசாரால் அப்பிரசுரங்களுடன் கைதுசெய்யப்பட்டு மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்ட சமயம் பிணையில்செல்ல அனுமதிக்கப்பட்டிருந்தார்.

இந்நபர் மீண்டும் நீதிபதி முன் ஆஜர்செய்யப்பட்ட சமயம் நீதிபதி திரு. டி. யேசுரத்தினம் அவருக்கு 200 ரூபா அபராதம் விதித்தார்.

## இன்று சுந்தரமூர்த்தி சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைச் சேக்கிழார் மன்றத்தின் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்ச்சி இன்று வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் நடைபெறவிருக்கிறது. மன்றத் தலைவர் திரு. த. சோமசுந்தரம் தலைமையில் இன்று பிற்பகல் 5 மணிக்கு அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ்த் துணைப் பேராசிரியர் கு. சுந்தரமூர்த்தி சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்துவார். (அ)

## சமசமாஜி...

[3ம் பக்கத் தொடர்ச்சி]

கடந்த முப்பது ஆண்டுகளாக காலிப்பகுதியில் எதுவித முன்னேற்றமும் காணப்படவில்லை. ஆனால் கடந்த சில மாதங்களுக்குள் இத்தொகுதியை அபிவிருத்தி செய்வதற்கு நாம் பல நடவடிக்கைகளை எடுத்துள்ளோம் என்றார்.

பத்தேகம எம். பி. திரு. ஈ. டி. விக்கிரமதிலக உட்பட வேறு பலரும் பேசினார்கள்.


RIO Daily 4 Shows
(Jaffna)
SIGN OF THE GLADIATOR
Color- Scope

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி, 2-30, 6-30, 9-30
சிவாஜி — ஜெமினி
பந்தபாசம்

புலோலி சினிமாஸ்
(பருத்தித்துறை)
தினசரி 2-30, 6-30,
ரவிச்சந்திரன்-ராஜன்
டில்லிமாப்பிள்ளை

நாகம்ஸ்
(சுன்னாகம்)
தினசரி பி.ப. 6-45, 10-00
சனி, ஞாயிறு பி. ப. 2-30
எம்.ஜி. ஆர்-லதா
உழைக்கும் கரங்கள்


அச்சுவேலி நவக்கிரியில்

# வீடெரிப்பு, கத்திவெட்டு; ஒருவர் ரிமாண்டில்

[மாவிட்டபுரம்]

அச்சுவேலி நவக்கிரியில்இடம் பெற்றதாகக் கூறப்படும் வீடெரிப்பு, கத்திவெட்டு சம்பவங்கள் தொடர்பாக ஒருவர் கைதுசெய்யப்பட்டு ரிமாண்டில் வைக்கப்பட்டுள்ளதுடன் மேலும் சிலர் பொலிசாரால் தேடப்பட்டுவருகின்றனர்.

அச்சுவேலி நவக்கிரியைச் சேர்ந்த கே. கயிலாயபிள்ளை என்பவரது வீடு எரிக்கப்பட்டது. அவ்விடத்தைச் சேர்ந்த ஏ. தங்கராசா என்பவர் கத்திவெட்டுக்கிலக்கானது ஆகிய சம்பவங்கள் தொடர்பாக காங்கேசன்துறைப் பொலிசில் புகார் செய்யப்பட்டதை யடுத்து பொலிசார் புலன்விசாரணையில் ஈடுபட்டனர்.

கயிலாயபிள்ளை என்பவரது மகளைத் திருமணம் செய்த தங்கராசா என்பவர் தமது மனைவி இறந்துவிடவே கயிலாயபிள்ளையின் மற்றொரு மகளை மனைவியாக்கிக்கொண்டதாகவும் இக்கணவன் - மனைவிக்கிடையில் ஏற்பட்ட தகராறு காரணமாக தங்கராசா மனைவியைத் தாக்கியதாகவும் அவர் தமது தந்தையின் வீட்டுக்குச் சென்றதாகவும் அங்கு தமது மனைவியைத் தேடிச்சென்ற தங்கராசா கயிலாயபிள்ளையின் வீட்டுக்கு நெருப்பு வைத்துக் கொழுத்தியதாகவும் இதையடுத்து தங்கராசா பலத்த கத்திவெட்டுக் கிலக்கானதாகவும் பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதுகுறித்து விசாரணை செய்த பொலிசார் கயிலாயபிள்ளை என்பவரை சந்தேகத்தின்பேரில் கைதுசெய்து மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்தசமயம் அவரை ரிமாண்டில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது.

பொலிசார் இதுகுறித்து மேலும் சிலரைத் தேடிவருகின்றனர். கத்திவெட்டுக்கிலக்கான தங்கராசா என்பவர் யாழ். ஆஸ்பத்திரியில்சிகிச்சை பெற்றுவருகிறார்.

## "நத்தார்க்கால உல்லாசம்"

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரியில் இம்மாதம் 27-ந் திகதி பிற்பகல் 'நத்தார்க்கால உல்லாசம்' என்ற இசைநிகழ்ச்சி இடம்பெறவுள்ளது. இலங்கை வானொலி கிறிஸ்தவ சமயப் பாடகி செல்வி ரூபினி இந்நிகழ்ச்சியை அளிக்கிறார். (அ)

• • •

## புதுமுறைத் தெரிவு

[அரியாலை]

யாழ்ப்பாணம் கொட்டடி முத்தமிழ் சனசமூக நிலையத்தின் புதிய வருட தலைவரும், உபதலைவரும் பொதுமக்களின் வாக்களிப்பின் மூலம் தெரிவு செய்யப்படவிருக்கிறார்கள்.

நாளைக் காலை முதல் மாலை வரை நடைபெறவிருக்கும் இவ் வாக்களிப்பில் இப்பதவிகளுக்காக திருவாளர்கள் வ. ஞானசேகரம், க. கலாமோகன், சி. புஷ்பராசா ஆகியோர் போட்டியிடுகின்றனர். [அ]


Regal (Jaffna)
Daily at 4-45 7-00 & 9-30 P. M. only
BARAKA FOR SECRET SERVICE
(Spy - Color - Scope)

### மணிவாக்கு

அரசியலிலும், சமூக சேவையிலும் ஈடுபடுபவர்களுக்கு தெய்வநம்பிக்கை மிக மிக அவசியம்.

— காந்திமகான்.

# ஈழநாடு
The Eelanaadu

## கைத்தொழில் அபிவிருத்தி

இந்நாட்டில் கைத்தொழில் வளங்கள் பற்றி நீண்டகாலமாக ஆராயப்படவில்லையென்றும் அபிவிருத்தி அடைந்த அல்லது அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள் தமது நாட்டில் கைத்தொழில் வளம்பற்றி ஆராய்ந்து செயலாற்ற வேண்டும் என்றும் நல்லூர் எம். பி. திரு. எம். சிவசிதம்பரம் தேசியஅரசுப் பேரவையில் எடுத்துக் காட்டியிருக்கிறார்.

கைத்தொழில் விஞ்ஞான விவகார அமைச்சின் நிதி ஒதுக்கீடு மீதான விவாதத்தில் பேசுகையிலேயே திரு. சிவசிதம்பரம் மேற்கண்ட யோசனையைத் தெரிவித்திருக்கிறார்.

பருத்தித்துறைப்பிரதிநிதி திரு. தா. இராசலிங்கம் வடபகுதியில் நிறுவக்கூடிய கைத்தொழில்கள் பற்றியும் மூலவளங்கள் கிடைக்கும் இடங்களைப் பொறுத்துத் தொழில்கள் ஆரம்பிக்க வேண்டிய அவசியம்பற்றியும் எடுத்துக்கூறியதை நாம் நேற்று வலியுத்தியிருந்தோம்.

வரவு-செலவுத்திட்ட விவாதத்தில் பேரவைஉறுப்பினர்கள் ஒவ்வொருவரும் தமது தொகுதியிலுள்ள குறைகளை எடுத்துச்சொல்வதும் தமது தொகுதியை அபிவிருத்தி செய்வதற்கான ஆலோசனைகளை எடுத்துச் சொல்வதும் வழமை. அது அவர்களின் கடமையுமாகும்.

நமது நாட்டைப் பொறுத்தவரையில் எந்தெந்த மூலப்பொருள்கள் எந்தெந்தப் பகுதிகளில் கிடைக்கின்றன. இவற்றைக் கொண்டு என்னென்ன பொருள்களை உற்பத்திசெய்யலாம் என்று ஆராய்ந்து தொழில்கள் தொடங்கப்பட்டுள்ளன வென்று சொல்வதற்கு ஆதாரம் அதிகமில்லை.

ஆட்சிபீடத்தில் அமரும் கட்சிகளும் அந்தக் கட்சிகளில் செல்வாக்கைப் பெற்றவர்களும் தமது எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு தொகுதியின் அபிவிருத்தியை நோக்கமாகக் கருதித் தொழிற்சாலைகளை உருவாக்கியதே நமது நாட்டின் கடந்த காலச்சரித்திரத்தில் காணக் கூடியதாக இருக்கிறது.

''கறியிங் கோல் ரு நியு காசில்'' என்று ஆங்கிலத்தில் ஒரு பழமொழியுண்டு. நிலக்கரி உற்பத்தியாகும் நியுகாசில் என்ற இடத்துக்கே நிலக்கரி கொண்டு செல்வதைப்போல என்பது இதன் அர்த்தம். இதே போல் தமிழிலும் 'கொல்லன் தெருவில் ஊசி விற்பது போல'' என்னும் பழமொழி இருக்கிறது.

நமது நாட்டில் தொழிற்சாலைகள் பல கடந்தகாலங்களில் அமைக்கப்பட்டிருப்பது இந்தப் பழமொழிகளையே நினைவூட்டும்.

சில தொழிற்சாலைகள் ''ஏறு மேட்டுக்குத் தண்ணீர் இறைப்பது போல'' என்ற பழமொழியையும் நினைவூட்டுகின்றன.

வெளிநாட்டு நிபுணர்கள் இங்கு வருகிறார்கள்; ஆலோசனைகள் கூறிச் செல்கிறார்கள். வெளிநாடுகளிலிருந்து உதவிகளும் கடனுதவிகளும் நமது நாட்டுக்குக் கிடைக்கின்றன.

உள்நாட்டில் கிடைக்கக் கூடிய மூலவளங்களைப் பயன்படுத்தித் தொழில்கள் உற்பத்திசெய்யப்பட்டிருந்தால் இன்று நமது நாடு கைத்தொழிலில் வெகுவாக முன்னேறியிருப்பதுடன் பல பொருள்களுக்கும் வெளிநாடுகளை எதிர்பார்த்திருக்கவேண்டிய அவசியமேற்பட்டிருக்காது.

இன்று ஆட்சிபீடத்துக்கு வந்துள்ள அரசாங்கம் நாட்டை முன்னேற்றுவதும் கைத்தொழில்களை ஆரம்பித்து வேலைவாய்ப்புக் கொடுத்து வேலையில்லாத் திண்டாட்டத்தை நீக்குவதும் தமது நோக்கமென்று தெரிவித்திருக்கிறது.

பிரதேச வேறுபாடுகளின்றி மூலப்பொருள்களை ஆராய்ந்து அதற்கேற்பத் தொழில்களைத் தொடங்கினுல் நிச்சயம் இந்த அரசு தனது நோக்கத்தில் வெற்றி பெறும் என்று எதிர்பார்க்கலாம்.

'ஓமான்' நாட்டுக்கு நண்பனை

# வழியனுப்பவந்த இருவர் கோவில் கேணிக்கு பலி!

[சங்கானை]

ஓமான் நாட்டிற்குச் சென்ற நண்பனை பயணம் அனுப்பிய பின் விருந்து கொண்டாடியவர்களில் இருவர், கைகழுவச் சென்ற இடத்தில் அம்மன் கோவில் கேணிக்குப் பலியானார்கள்.

வட்டுக்கோட்டை மேற்கைச் சேர்ந்த மூ யோகநாதன், சு. சண்முகராசா ஆகிய இருவருமே இவ்விதமாகப் பலியானவர்களாகும். இவர்களைக் காப்பாற்றச் சென்ற மற்றொருவரான சண்முகவேலு ஆபத்தான நிலையில் மூளாய் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வெளிநாட்டுக்குச் சென்ற நண்பனை வழியனுப்பிவிட்டு வந்த 5 இளைஞர்கள், சித்தன் கேணி வட்டுக்கோட்டை வீதியிலிருக்கும் அம்மன் கோவில் தீர்த்தக்கேணிக்கருகில் மதுபானம் அருந்திய பின் விருந்து கொண்டாடியதாகவும் அதன்பின் கைகழுவச்சென்ற யோகநாதன்ர தவறி விழுந்தபோது அவரை காப்பாற்றச்சென்ற சண்முகராசாவும் தவறி கேணிக்குள் வீழ்ந்ததாகவும் இச்சம்பவம் பற்றிக் கூறப்படுகிறது.

இருவரையும் காப்பாற்ற சண்முகவேலுவும் நீரில் குதித்ததாகவும் மூவரும் நீரில் மூழ்கியதைத் தொடர்ந்து அயலவர்கள் ஓடிவந்து மூவரையும் நீரிலிருந்து மீட்டு ஆஸ்பத்திரியில் அனுமதித்ததாகவும் இச்சம்பவம் பற்றி மேலும் கூறப்படுகிறது.

சண்முகவடிவேலு மட்டும் உயிர் தப்பினர். மற்றும் இருவரும் மரணமானார்கள்.

மரணவிசாரணை அதிகாரி கே. சேனாதிராசா மரணவிசாரணை நடத்தினர். சங்கானை ஆஸ்பத்திரி வைத்திய அதிகாரி திருமதி திருச்செல்வம் பிரேத பரிசோதனை நடத்தினர். நீரில் மூச்சு திணறியதால் ஏற்பட்ட மரணம் எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

### லைசன்ஸ் யாருடையது?

மோட்டார் வாகன சாரதி லைசென்ஸ் ஒன்று யாழ். மக்கள்வங்கிப் பிரதம செயலகத்தைச் சேர்ந்த திரு. த. திருநாவுக்கரசினல் யாழ். தபால் கந்தோருக்கருகில் கண்டெடுக்கப்பட்டுஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் அத்தாட்சிக் காட்டிப் பெற்றுக்கொள்ளலாம். (அ)

### 'ஈழநாடு' பஞ்சாங்கம்

'ஈழநாடு' புதுவருட பஞ்சாங்கம் இம் மாதம் 31-ம் திகதி 'ஈழநாடு' பிரதியுடன் இணைந்திருக்கும். வாசகர்கள் தமது தேவைகளுக்கு முன்கூட்டியே எமது ஏஜண்டுகளிடம் பதிவுசெய்து கொள்ளவும். ஏஜண்டுகள் 'ஈழநாடு' விநியோகப் பகுதியுடன் தொடர்பு கொள்ளும்படி கோரப்படுகின்றனர்.

### டிக்கட்.....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சந்தியாப்பிள்ளை என்ற இப்பிரயாணி யாழ்ப்பாணம் நீதவான் திரு. கே வி நவரத்தினம் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டார்.

சந்தேகநபர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி ஏ. அன்ரனி, இ. போ. ச. உத்தியோகத்தர்கள் தங்களை அடையாளம் காட்ட மறுத்ததனலேயே அப்பிரயாணி டிக்கட்டைக் காட்டவில்லையென்றும், சாட்சிகள் இருப்பதாகவும்கூறினர்.

நீதவான் விசாரணையை ஒத்திவைத்தார். (க)

## தாயார் கண்டித்தார்: இளம் பெண் தற்கொலை!

[நெல்லியடி]

தாயாரின் கண்டிப்புக்கு இலக்கான ஒரு இளம்பெண் நச்சுத்திராவகம் அருந்தி தற்கொலைசெய்துகொண்ட சம்பவம் வரணியில் நிகழ்ந்துள்ளது.

வரணியற்றளை எனுமிடத்தைச் சேர்ந்த மாபபாணர் சரஸ்வதி என்ற 20 வயது இளம்பெண்ணே இவ்வாறு தற்கொலை செய்து கொண்டவராவார்.

கிருமிநாசினி அருந்திய மேற்படி இளம்பெண் ஆபத்தன நிலையில் மந்திகை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அங்கு காலமானர்.

இம் மரணம் சம்பந்தமாக விசாரணையை வடமராட்சிப் பகுதி திடீர்மரணவிசாரணை அதிகாரி எம். புவனேந்திரன் நடாத்தினர்.

தாயாரான குஞ்சுப்பிள்ளை சாட்சியமளிக்கையில் கூறியதாவது: ''இறந்தவர் எனது மகள். திருமணம் முடிக்கவில்லை. சுபாவத்திலேயே சரஸ்வதி கோபக்காரி. நான் பெட்டியில் பணம் வைத்து எடுப்பது வழக்கம். வழக்கம் போல சென்றவாரமும் 250 ரூபா வைத்தேன். செலவிற்கு பணம் எடுக்கச்சென்றபோது 150 ரூபாவைக் காணவில்லை. 100 ரூபாவே இருந்தது. இது பற்றி சரஸ்வதியை விசாரித்தேன். சரஸ்வதி விட்டிலிருக்கும் பணத்தை யாருக்கும் கொடுத்துவாங்குவதுவழக்கம். நான் விவரித்தபோது யாருக்கும் பணம் கொடுக்கவில்லை எனக் கூறினர். எனக்கு கவலையும் கோபமும் ஏற்படவே சரவதியைக் கண்டபடி கையால் அடித்தேன்.''

இம் மரணம் தற்கொலை எனத் தீர்ப்பு வழங்கப்பட்டது.

### மோசடி.....

பொலிஸ்பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளார்.

கோப்பாய் பொலிசைச் சேர்ந்த வல்லிபுரம், புகேயு ஆகிய பொலிஸ் உத்தியோகத்தர்களே இவ் வாலிபரைவிசாரணைக்குட்படுத்தியவர்களாவர். (கா)

நீதிமன்றம் முன் ஆயுதக்கோஷ்டி:

# சந்தேகநபர்கள் பிணையில் அனுமதி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நீதிமன்றத்திற்கு முன்னுல் நிறுத்தப்பட்டிருந்த காரொன்றில், பயங்கர ஆயுதங்களுடன் கைதான நான்கு சந்தேகநபர்களும் நேற்று தலா 2000 ரூபா பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

யாழ். நீதவான் திரு. கே. வி. நவரத்தினம் முன்னிலையில் அச்சுவேலியைச் சேர்ந்த சந்தேகநபர்களான முருகன் துரைராஜா, துரைராஜா சோதிலிங்கம், கார்த்திகேசு கணபதி, துரைராஜா ஆகிய நால்வரும் ஆஜர்செய்யப்பட்டனர்.

இம் மாதம் 14-ம் தேதி யாழ். நீதிமன்றத்திற்கு முன்னுல் சந்தேகத்திற்கிடமான முறையில் சிலர் நடமாடுவதை அவதானித்த யாழ். நீதிமன்ற சார்ஜன்ட் திரு. அன்ரன் பொலிசாருக்குத் தகவல்கொடுத்தார். இதனைத் தொடர்ந்து சப் இன்ஸ்பெக்டர் கிருஷ்ணராசா தலைமையில் அங்கு வந்த பொலிஸ் கோஷ்டி, காரைச் சோதனையிட்டுக் கார் ஆசனத்திற்குக் கீழ் மறைத்துவைக்கப்பட்டிருந்த வாள், வெட்டுக்கத்தி ஆகியவற்றைக் கைப்பற்றியதுடன், சாரதி உட்பட நால்வரைக் கைதுசெய்தனர்.

சந்தேகநபர்கள் நால்வரும் றிமாண்டில் வைக்கப்பட்டு, நேற்று நீதவான் முன் ஆஜர் செய்யப்பட்டனர்.

சந்தேகநபர்கள் சார்பில் சட்டத்தரணி ஆர். பி. சபாரத்தினம் ஆஜரானர்.

சந்தேகநபர்களை 3 நாளுக்கொரு தடவை பொலிஸ்நிலையத்தில் சமுகமளிக்குமாறு உத்தரவிட்ட நீதவான் விசாரணையை ஜனவரி 16-ம் தேதிக்கு ஒத்திவைத்தார். (க-அ)

### மரத்திலிருந்து...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கனகரத்தினம் விசாரணையை நடாத்தினர்.

அரசடி வீதி 2-ம் ஒழுங்கையிலுள்ள வீடொன்றில் கள்ளுச் சீவுவதற்காக மரத்தில் ஏறிய இவர் கைதவறியதால் மரத்திலிருந்து விழுந்தபோது அவர் வைத்திருந்த கத்தி முன்னதாகவே விழுந்து விட்டதாகவும், அதன்மீது விழுந்ததினுல் கத்தி அவரது உடலில் பலமாகஏறியதாகவும் விசாரணையின்போது தெரிவிக்கப்பட்டது.

யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அங்கு அவர் மரணமானர். மரணவிசாரணை அதிகாரி திரு எஸ். கனகரத்தினம் விபத்து மரணம் எனத் தீர்ப்பளித்தார். [கா]

'ஈழநாடு'
தினக்குறிப்பு
1978

அடுத்த வாரம் முதல்
விற்பனையாகும்

விலை:- ரூபா 4-50 சதம்

வியாபாரிகளுக்கு கழிவுண்டு.

தொடர்பு கொள்ளவும்:-

கலாநிலையப் பதிப்பகம்
303, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7707

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 24-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu Post Box No. 49, Jaffna. Telegram Eelanaadu. Telephone 389. Registered as a Newspaper in Sri Lanka.